**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 03.07.2025**

**O.S. 79/2019**

**பி. வா.சா. 1 - முத்துசாமி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

ஆபத்துகாத்த பிள்ளை எழுதிய ஆவணம் மற்றும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஒற்றி, ஒற்றிவிலை ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். ஆகையால் தான் ஆபத்துகாத்த பிள்ளை எழுதிய ஆவணம் மற்றும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஒற்றி, ஒற்றிவிலை ஆவணங்கள் பற்றி தெரியாததால் தான் எனக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தில் மேற்படி ஆவணங்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆபத்துகாத்த பிள்ளையை நான் பார்த்துள்ளேனா என்றால் ஆம் 1969-ல் பார்த்துள்ளேன். அவர் யாருடன் தாமசம் என்றால் தனியாக தான் வசித்து வந்தார். அவர் எந்த ஊரில் தாமசம் என்றால் இரவிபுதூரில் வசித்து வந்தார். அவர் சொந்த வீட்டில் இருந்தாரா வாடகை வீட்டில் இருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் பகவதி பெருமாள் எத்தனை சொத்தை விலைக்கு கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் சொத்து எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியும் எத்தனை சொத்து என்று எனக்கு தெரியாது. எந்த சொத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் இரவிபுதூரில் உள்ள வீட்டை எழுதிக்கொடுத்தார் யாருக்கு எழுதிக்கொடுத்தார் என்று தெரியுமமா என்றால் எனது பெரியப்பா முறையில் உள்ள இருளப்பன் பிள்ளைக்கு என்று நினைக்கிறேன். எனக்கு எத்தனை வயது இருக்கும் போது எழுதிகொடுத்தார், எந்த வருடம் எழுதிக்கொடுத்தார் நான் பிறப்பதற்கு முன்பா

அல்லது பின்பா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை பகவதிபெருமாளுக்கு எத்தனை சொத்து எழுதிக்கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சிதம்பரதாணு பிள்ளைக்கு எத்தனை சொத்து எழுதிக்கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வீரலெட்சுமிக்கு எத்தனை சொத்து எழுதிக்கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ராமசாமி பிள்ளை, செல்லப்பன் பிள்ளைக்கு எத்தனை சொத்துக்கள் உண்டு என்று தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது.

வழக்கு பட்டிகை சொத்தின் வடக்கே யாருடைய சொத்து உள்ளது என்றால் வடக்கு பக்கம் இரவிபிள்ளை மகள் வீரலட்சுமியின் மனை உள்ளது. மேற்படி விபரம் எனது பெயரில் விடுதலை பத்திரம் எழுதியபிறகு அதில் குறிப்பிட்டுள்ளதை கண்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் தெற்கே யாருடைய சொத்து உள்ளது என்றால் புதிய சர்வே எண்.442 மனை உள்ளது. புதிய சர்வே எண்.442 மனை யார் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் வடக்கே வீரலட்சுமியின் மனை உள்ளது அது ஆதியில் யாரிடம் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. இரவிபிள்ளை மகள் வீரலெட்சுமி தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி பெயர்கள் எதுவும் எனக்கு தெரியாது, வழக்கு பட்டிகை சொத்து எங்கள் யாருக்கும் உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

மேற்படி பெயர்களில் சிலவற்றை எனது குடும்பத்தார்களின் பெயரோடு ஒற்றுப்போவதால் வழக்கு பட்டிகை சொத்தினை அபகரிக்க வேண்டி சட்டத்திற்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செண்பகம் அம்மாள் சிதம்பரதாணு பிள்ளையிடம் ஒற்றிக்காண பணத்தை தந்து விடுங்கள் நான் ஒற்றியை திரும்ப தந்து விடுகிறேன் என்ற கேட்டார்கள் மேற்படி விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மாடிபிள்ளை

சிதம்பரதாணுபிள்ளையிடம் ஒற்றியை திரும்ப கேட்டு அவர் 400 ரூ. தரமுடியாது என்று ஒற்றியை திருப்பாமல் விட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி செண்பகம் அம்மாள் சிதம்பரதாணு பிள்ளையிடம் ஒற்றியை கேட்டு அவர் திரும்ப கொடுக்காததால் தான் 30.09.1961 அன்று ரூ. 400/- மாடிபிள்ளைக்கு ஒற்றி விலைக்கு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

18.04.1968 அன்று மாரிபிள்ளை சிதம்பரதாணு பிள்ளையிடம் ஒற்றியை திரும்ப கேட்டு அவர் முடியாது என்ற சொன்னதால் மாடிபிள்ளை திருமால் பிள்ளைக்கு ஒற்றிக்குவிலை கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் நான் சொல்லும் படி ஆபத்துகாத்த பிள்ளை மகள் வீரலெட்சுமிக்கு விசாலாட்சி, சாந்தம் என்ற பெண்பிள்ளைகள் கிடையாது என்றால் சரியல்ல. அதேபோல் ஆபத்துகாத்த பிள்ளைக்கு செல்லப்பன் பிள்ளை என்ற மகன் கிடையாது என்றால் சரியல்ல. சில பெயர்களின் ஒற்றுமையை வைத்து பொய்யாக இந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் ஆபத்துகாத்த பிள்ளைக்கு எவ்வாறு எனக்கு உறவினர் எவ்வாறு நான் வாரிசு என்பதை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

வழக்கு பட்டிகை சொத்தை யார்யாரெல்லாம் கைவசம் வைத்திருந்தார் என்ற விபரத்தை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது பற்றி தெரியாது. "சொத்தினை ஒருமுறை அடகு வைத்தால் எப்போதுமே அது அடமானமே அடமான தொகையை திருப்பி செலுத்தி மீட்கப்படும் வரை அல்லது டெப்பாசிட் செய்யும்வரை அதை மீட்பதற்கு எந்த வரம்பும் கிடையாது" என்ற விபரத்தை யார் சொல்லி பிரமாண வாக்குமூலத்தில் எழுதப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல்

செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் முழு விபரங்களையும் என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. பிரமாண வாக்குமூலத்தில் ஆபத்து காத்த பிள்ளை வேலம்மாள் தம்பதியிரின் மகனான பகவதிபெருமாள் என்பதை காட்டுவதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம் தாக்கல் செய்துள்ளேன். வீரலெட்சுமி யின் பிள்ளைகள் என்று விடுதலை பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நபர்கள் ஆபத்துகாத்த பிள்ளையின் வாரிசுகள் தான் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

1ம் பிரதிவாதி மீனா எனது உறவினர் என்றால் சரிதான். எப்படி உறவினர் என்றால் என் தாத்தாவும் மீனாவின் கணவரின் தாத்தாவும் சகோதரர்கள். 1ம் பிரதிவாதி உறவினர் என்பதால் அவருக்கு வேண்டியும் சாட்சியம் சொல்கிறேன் என்றால் இதற்கு என்ன பதில் சொல்லவேண்டும் என்று தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எதிர்உரை நானும் மீனாவும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிர்உரை தயாரிப்பதற்கு வழக்கறிஞரிடம் விபரங்கள் மற்றும் ஆவணங்கள் எடுத்துக்கொடுத்தது நானும் மீனாவும் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திலுள்ள வீடும் இரவிபிள்ளை வீரலெட்சுமி வீடும் ஒரே வீடு அது தெரியுமா என்றால் அது தெரியாது. போர்வெல் போடுவதற்காக யார் ஆட்களை கூட்டிவந்தார் என்றால் மீனா ஆகையால் எப்போது போர்வெல்போடுவதற்காக யாரை, எப்போது கூட்டிவந்தார் என்று எனக்கு தெரியாது ஆனால் போர் போட்ட விபரம் எனக்கு தெரியும்.

நானும் மீனாவும் தாக்கல் செய்த எதிர்உரையில் போர்வெல் யாரை வைத்து போடப்பட்டது மற்றும் அதற்கான ரசீதுகள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி மீனாவிடம் தான் கேட்கவேண்டும். மேற்படி ரசீதுகளை மீனா என்னிடம் காட்டினாரா

என்றால் காட்டவில்லை. போர்வெல் போட்டதும் 1ம் பிரதிவாதிக்கும் வாதிகளுக்கும் 02.05.2019 ல் தகராறு ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள விடுதலை பத்திர ஆவணம் மற்றும் விலைஆவணங்கள் பற்றி வாதிகளுக்கு எப்போது தெரியவந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. வாதிகளுக்கு 11.01.2019 அன்று நகல் எடுத்து பார்க்கும் போது தான் தெரியவந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எற்படுத்திய விடுதலை பத்திரம் மற்றும் விலையாவணங்கள் எதுவும் செல்லாது அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

நானும் 1ம் பிரதிவாதியும் வழக்கு பட்டிகை சொத்தில் இடையூறு செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை பொய்யாக எழுதி மறைத்து வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் இந்த வழக்கு அற்பமானது மோசடியானது என்கின்ற வார்த்தைகள் நான் சொல்லிக்கொடுத்து எழுதியது தான் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வார்த்தைகள் வாதிகளுக்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் சரியல்ல.

விடுதலை பத்திரத்தை எழுதிக்கொடுத்தவர் மற்றும் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் வழக்கு பட்டிகை சொத்தில் உரிமை இல்லை என்பதால் வாதிகளிடம் அடமானத்தை மீட்பதற்கு நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நானும் அடமானம் வைத்தவரும் அடமானத்தை வாதிகளிடம் திருப்பிதர கேட்கவில்லை என்றால் எங்கள் தாத்தா திருப்பிக்கொள்வார் என்று நாங்கள் நினைத்தோம். வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்று காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, எனக்கும் வழக்க பட்டிகை சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது ஆகையால் வழக்கு வாதிகளுக்கு ஆதரவாக செலவுதொகையுடன் தீர்ப்பாக வேண்டும்

என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்உரையும் முதல் விசாரணை வாக்குமூலமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆபத்துகாத்த பிள்ளை வாரிகள் ஏற்படுத்திய பங்கு செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்தாலே உண்மை விபரங்கள் தெரியவரும் என்றால் சரியல்ல. நான் உண்மையான வாரிசு இல்லை என்பதால் என்னால் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யஇயலவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து வாதிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கும் வழக்கு பட்டிகை சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**